**C.C. No.34/2019**

**Dated: 03.12.2024**

**PW: 1** வீரபாண்டியன்

**(Witness has been administered Oath U/s 3 of the Oaths Act 1969)**

**குறுக்கு விசாரணை :**

1. என்ன தொழில் செய்து வருகிறிர்கள் என்றால் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். எதிரிக்கும் உங்களுக்கும் எப்படி பழக்கம் என்றால் எதிரியும் அவரது மகனும் ஒட்டல் வைத்திருந்தார்கள் அந்த ஒட்டலுக்கு நான் சாப்பிடசெல்லுவேன், அப்போது பழக்கம் .இந்த விபரத்தை உங்களது வழக்கு ஆவணங்களில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

2) நீங்கள் வட்டிதொழில் செய்து வருகிறிர்கள் என்றால் சரியல்ல. எதிரியின் மகனின் ஒட்டலில் பணிபுரிந்து வந்த வினோத் என்பவருக்கு தான் வட்டிக்கு பணம் கொடுத்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. அவர் யாரென்றே எனக்கு தெரியாது. உங்களுக்கு சேகர் என்ற மற்றொரு பெயர் உண்டு என்றால் சரிதான். எதிரியின் மனைவி பெயர் குடும்ப விபரங்கள் தெரியுமா என்றால் தெரியாது. அவர் மகனது பெயர் தெரியுமா என்றால் தெரியும் . அவர் பெயர் விக்கி.

3) எதிரி என்ன தொழில் வந்தார் என்றால் அவர் தமிழ்நாடு போக்குவரத்து கழகத்தில் நடத்துனராக பணிபுரிந்தார். அதனால் எதிரி எந்தவிதமான தொழிலும் செய்யவில்லை என்றால் சரியல்ல . எதிரிக்கு உங்களை யாரென்றே தெரியாது என்றால் சரியல்ல. எந்த தேதியில் வழக்கறிஞர் அறிவிப்பு அனுபபினீர்கள் என்றால் 19.12.2018 ல் அனுப்பினேன். எதிரி உங்களுக்கு பதில் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். அவ்வாறு அனுப்பப்பட்ட பதில் அறிவிப்பில் 2016 , ஜீன் மாதம் வழக்கு காசோலை உள்பட 50 காசோலைகள் இருசக்கர வாகனத்திலிருந்து காணாமல் போய்விட்டது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

4) இது குறித்து 16.06.2016 ல் எதிரி அவரது வங்கியில் ஸ்டேப் பேமேண்ட் லட்டர் கொடுத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. வழக்கு காசோலையும் Stop payment என்ற காரணத்துடன் திருப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். காணாமல் போன காசோலைகள் குறித்து காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு மனு ரசீதும் பெறப்பட்டது என பதில் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. உங்களுக்கு எந்த தேதியில் காசோலை கொடுக்கப்பட்டது என்றால் 10.12.2018 ல் கொடுக்கப்பட்டது. 2016 ல் காணாமல் போன காசோலையானது 2018 ல் வசூலுக்கு தாக்கல் செய்யபட்டுள்ளது என்றால் காணாமல் போன விபரம்

எனக்கு தெரியாது. எதிரியின் மீது இதே நீதிமன்றத்தில் ரஞ்சித்குமார் என்பவர் ஒரு வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது. மேற்படி ரஞ்சித் குமாரிடமிருந்து வழக்கு காசோலையினை பெற்று அவரது தூண்டுதலின் பேரில் இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல.

5) எதிரி ஒரு காலத்திலும் உங்களிடமிருந்து பணம் பெறவில்லை என்றாலும் வழக்கு காசோலையும் உங்களுக்கு தரப்படவில்லை என்றாலும் சரியல்ல. இதே நீதிமன்றத்தில் காசோலை மோசடி வழக்குகள் பல தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரிதான்.

**மறு விசாரணை இல்லை.**

Taken before me in open court, read over to the witness and admitted by the deponent to be Correct.

Sd/-Thiru.K.Baskar
Judicial Magistrate,
Fast Track Court(Magisterial Level),
Kovilpatti.